சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – 2012–13ம் ஆண்டு மானிய கோரிக்கை எண்.42ன் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – அறிவிப்பு எண்.41 – கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு மின்மோட்டர் இயக்குவதற்கு சிறப்புப் படியாக ரூ.200/– ஊராட்சி நிதியிலிருந்து வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை

அரசாணை(நிலை) எண்: 71

நாள் 07.08.2012

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.234, நிதித் துறை, நாள் 1.6.2009.
2. அரசாணை (நிலை) எண்.15, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ5) துறை, நாள் 7.2.2011.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண். 28144/2012/இ2, நாள் 17.4.2012.

---

ஆணை:–

09.04.2012 அன்று நடைபெற்ற ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானிய கோரிக்கை எண்.42ன் மீதான விவாதத்தின்போது பதிலளித்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களால் அறிவிப்பு எண். 41ல் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

> "மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கிராம ஊராட்சிகளில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு மின்மோட்டர் இயக்குவதற்கு சிறப்புப் படியாக ரூ.200/– ஊராட்சி நிதியிலிருந்து வழங்கப்படும்".

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி வழங்கும் தருணம் ஜனவரி மற்றும் ஜூலையில் தற்காலிக உயர்வாக ரூ.40/– வழங்கப்பட்டு வருகிறது.

3. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு 01.01.2011 முதல் ரூ.2000/– என தொகுப்பூதியம் நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே மூன்றில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடிதத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவது அரசின் தலையாய நோக்கமாக உள்ளது. அதில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்களின் பங்கு மிக முக்கியமானது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் குடிநீரை நிரப்புவது மற்றும் பாதுகாப்பான குடிநீரை கிராம குடியிருப்புகளுக்கு பகிர்ந்தளிப்பது ஆகிய பணிகளை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் மேற்கொள்கின்றனர். மின்மோட்டாரை இயக்கி, பாதுகாப்பான குடிநீரை சீரான முறையில் பகிர்ந்தளிப்பதில் சில இடையூறுகள் ஏற்படுகின்றன.

அந்த இடையூறுகளைக் களைந்து பாதுகாப்பான சுத்தமான குடிநீரை அனைத்து கிராம குடியிருப்புகளுக்கும் வழங்கி வரும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு சிறப்புப் படியாக ரூ.200/– வழங்கலாம் எனவும், மேலும், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்குபவர்கள், கிராம ஊராட்சிகளில் குடிநீர் வழங்குவதை தவிர்த்து வேறு எந்த பணிகளையும் மேற்கொள்ளாத காரணத்தினால் அவர்களுக்கு காலமுறை ஊதியமோ அல்லது சிறப்பு ஊதியமோ வழங்க முடியாது என்கின்ற காரணத்தின் அடிப்படையில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் தொகுப்பூதியமான ரூ.2000/- உடன் சிறப்புப் படியாக பிரதி மாதம் ரூ.200/– வழங்குமாறும் மேற்கண்ட தொகையானது ஊராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டும் எனவும் அரசாணை(நிலை) எண்.60, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ5) துறை, நாள் 3.5.2005ன்படி கூடுதலாக இயக்கப்படும் ஒவ்வொரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ரூ.250/–ஐ மட்டும் தொடர்ந்து வழங்கலாம் என தெரிவித்து, அப்பொருள் தொடர்பான கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

5. மேற்காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. அதன்படி, கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு மின்மோட்டார் இயக்குவதற்கு சிறப்புப் படியாக மாதம் ரூ.200/– வழங்கி அரசு ஆணையிடுகிறது. கூடுதலாக இயக்கப்படும் ஒவ்வொரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ரூ.250/–ஐ மட்டும் தொடர்ந்து வழங்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது. இவ்வாணை, ஆணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைக்கு வரும்.

6. இதனால் ஏற்படும் செலவினம் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.39985/PC/2012, நாள் 19.7.2012ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் (சென்னை நீங்கலாக).
இயக்குநர், உள்ளாட்சி நிதி கணக்குகள் துறை, சென்னை –108.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை – 18/35/6.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குகள் துறை, சென்னை.
<u>நகல்</u>
நிதி (ஊரக வளர்ச்சி/ஊ.பி./சி.எம்.பி.சி) துறை, சென்னை –9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அனைத்துப் பிரிவுகள்.
நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சர் அலுவலகம்,
சென்னை–9
நிதி அமைச்சர் அலுவலகம், சென்னை –9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்கள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

7/8/12
பிரிவு அலுவலர்.